T-UN-673


தமிழ்ப் பல்கலைக்கழகச்

# செய்தி மலர்

திருவள்ளுவராண்டு 2034 சூன் 2003

## இந்திய மொழிகள் பள்ளி

தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகத்தில் தென்மண்டல மொழிகள் மையம், மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் சார்பில் வெளிமாநில ஆசிரியர்களுக்கான 18ஆவது தமிழ்ப் புத்தொளிப் பயிற்சி நிறைவு விழா நடந்தது. தென்மண்டல மொழிகள் மையப் பேராசிரியர் இராமசாமி வரவேற்றார். துணைவேந்தர் இ.சுந்தரமூர்த்தி தலைமையுரையில், "இலக்கியம் என்பது ஒன்று, அது பல மொழிகளிலும் எழுதப்படுகிறது. பிறமொழியாளர்கள் வேறு மொழியைப் படிப்பது மகிழ்ச்சியானது. 1730ஆம் ஆண்டு இலத்தீன் மொழியில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டது. பிறமொழிகளைப் படிப்பதாலும், மொழி பெயர்ப்பதாலும் அம்மொழியில் உள்ள பண்பாடு, பழக்க வழக்கங்கள், மொழி ஆளுமை, தொன்மை, பழமைகள் பரிமாறப்படும். இப்பயிற்சிக்கு வந்தவர்கள் பிறமொழி நூல்களை மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டார். ஜெர்மன் ஹைடல்பர்க் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் தாமோதரன் பேசுகையில், தமிழ் கடினமான மொழி என்றும், வேகமாகப் பேசுகிறோம் என்றும் பலர் கூறுகின்றனர். ஆனால் ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டால், நம்மைவிடப் பலர் வேகமாகப் பேசுகின்றனர். ஒரே நோக்கத்துடன் ஆர்வம், பிறமொழி மைய ஒத்துழைப்பு, சிறந்த ஆசிரியர், போதிய நேரம் கிடைத்தால் எந்த மொழியையும் கற்கலாம். வகுப்புக்களில் மட்டும் மொழிகளை படிக்காமல், பிறரோடு கலந்து பேசினால் மட்டுமே பேச்சு மொழி கிடைக்கும் என்றார். பிறமொழியாளர்களுக்கு இதுபோன்ற புத்தொளிப் பயிற்சிகளைக் குறுகிய காலங்களுக்கு ஒரு முறை நடத்தினால், போதிய மொழித் தொடர்பு கிடைக்கும் என்றார். இந்தப் புத்தொளிப் பயிற்சியில் வெளிமாநிலங்களைச் சேர்ந்த பலர் பயிற்சி பெற்றனர். பயிற்சி பெற்றவர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் தஞ்சை மூத்த இளவரசர் சிவாஜி ராஜா போன்ஸ்லே கலந்து கொண்டார்.





## அனைத்துலக ஔவைத்தமிழ் ஆய்வுமாநாடு கருத்தரங்கம்


தமிழ்ப் பல்கலைக்கழகக் கட்டிடக்கலைத் துறை, திருவாவடுதுறை ஆதீனம், திருவையாறு தமிழய்யா கல்விக்கழகம் சார்பில் ஔவைத்தமிழ் ஆய்வு மாநாடு-கருத்தரங்கம் மே23-25 நாள்களில் சிறப்புற நடந்தேறியது.

தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்புமிகு முனைவர் கா.காளிமுத்து அவர்கள் ஆய்வுத் தொகுதிகளை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார். தமிழறிஞர் பலரும் கலந்து கொண்டனர்.


-முனைவர் கோ.தெய்வநாயகம், கட்டிடக்கலைத்துறை

# மயிலாடும்பாறை - அகழாய்வு

தமிழ்ப் பல்கலைக்கழக மாண்புமிகு துணைவேந்தர் பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி அவர்களின் ஆணையின் பேரில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறைத்தலைவர் முனைவர் கா.ராஜன் தலைமையில் தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி வட்டம் தொகரப்பள்ளி சந்திப்பு சாலைக்கு வடமேற்கே 4 கி.மீ. தொலைவிலும், சென்றாயநாயக்கனூர் கிராமத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ள மயிலாடும்பாறை என்ற இடத்தில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வு மாணவர்களுக்குத் தொல்லியல் அகழாய்வு நெறிமுறைகளில் பயிற்சி அளிக்கவும் தமிழரின் தொன்மைப் பண்பாட்டினை வெளிக்கொணரவும் மேற்கொள்ளப்பட்டது. இவ்வகழாய்வில் திரு ந.அதியமான், முனைவர் பா.ஜெயக்குமார் ஆகியோர் பல்கலைக்கழகத்தின் சார்பாகக் கலந்துகொண்டனர். புதுதில்லியில் உள்ள மத்திய தொல்லியல் ஆய்வுத்துறை நடத்திவரும் உயர் ஆய்வு மையமான தொல்லியல் பள்ளியில் பயின்று பயிற்சி பெற்ற திருவாளர்கள் மு.ராஜேஷ், பா.அறவாழி, ரா.குமரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் தஞ்சாவூர் தொல்லியல் அலுவலர் தி.சுப்பிரமணியன் அவர்களும் தமிழ்ப் பல்கலைக்கழக, சென்னைப் பல்கலைக்கழக ஆய்வு மாணவர்களும் கலந்து கொண்டு இவ்வகழாய்வின் மேம்பாட்டிற்குப் பேருதவி புரிந்தனர். மத்திய தொல்லியல் ஆய்வுத்துறை இவ்வகழாய்விற்கு நல்கை வழங்கி ஊக்குவித்துள்ளது.




மயிலாடும்பாறை தமிழர் தொன்மைப் பண்பாட்டினைத் தாங்கி நிற்கும் வகையில் மண்வளம், நீர்வளம் மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் கொண்டிருக்கிறது. இவ்வூர் சமகாலத்திய பண்பாட்டு எச்சங்களைக் கொண்டு விளங்கும் தொகரப்பள்ளி, வேடர்தட்டக்கல், கங்காவரம், மல்லபாடி, குட்டூர், கப்பலவாடி, சாம்பல்பட்டி போன்ற ஊர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. மேற்கூறிய ஊர்கள் அனைத்தும் மயிலாடும்பாறையைச் சுற்றி 10 கிமீ தொலைவில் அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த முனைவர் பி.நரசிம்மையா தொகரப்பள்ளியில் மேற்கொண்ட ஆய்வுநிலை அகழாய்வும், பேராசிரியர் கே.வி.ராமன் தலைமையில் சென்னைப் பல்கலைக்கழகம் குட்டூர், மல்லப்பாடி போன்ற இடங்களில் மேற்கொண்ட அகழாய்வும் புதிய கற்கால பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்தி உள்ளன. மல்லபாடியில் முதன்முதலாகப் பாறை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. முனைவர் கா.ராஜன் அவர்கள் தமிழ்நாடு தொல்லியல் துறை தொல்லியல் அலுவலர் திரு தி.சுப்பிரமணியன் மற்றும் காவேரிப்பட்டினத்தைச் சார்ந்த புலவர் துரைசாமி அவர்களுடன் இணைந்து 1989இல் மேற்கொண்ட களப்பணியில் நூற்றுக்கணக்கான பெருங் கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் கொண்ட ஊர்களும், இருபதுக்கும் மேற்பட்ட பாறை ஓவியங்களைக் கொண்ட இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதேபோன்று தமிழ்நாடு தொல்லியல் ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குநர் முனைவர் இரா.நாகசாமி அவர்கள் தலைமையில் 1970களில் மேற்கொள்ளப்பட்ட களஆய்வுகளில் சந்தூருக்கு அருகாமையில் அமைந்துள்ள வேடர்தட்டக்கல்லில் காலத்தால் முந்திய வட்டெழுத்து நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்கூறிய இடங்கள் அனைத்தும் மயிலாடும்பாறையைச் சுற்றி அமைந்திருக்கின்ற காரணத்தால் இவ்வூர் தொல்லியல் வரைபடத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகிறது. மேலும் சங்ககாலத்தில் கங்கர்கள் எனும் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்த பகுதியாக இப்பகுதி விளங்குவதால் எல்லா வகையிலும் இவ்வூர் சிறப்புப் பெறுகின்றது. மேற்கண்ட சுற்றுப்புறச் சூழலையும், வரலாற்றுப் பின்னணியையும் கொண்டு விளங்கும் இவ்வூரை அகழாய்வு செய்ததில் இதன் பண்பாட்டுக் கூறுகள் கி.மு.10,000 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றமை இவ்வாய்வின் ஒரு சிறப்பு அம்சமாகும்.





மயிலாடும்பாறையில் மொத்தம் ஐந்து அகழாய்வுக் குழிகளும் ஒரு பெருங்கற்படைச் சின்னமும் தோண்டப்பட்டன. ஐந்து குழிகளில் இரண்டு பாறைக் குகைகளிலும், மூன்று மலைகளின் மேல் உள்ள சமவெளிப் பகுதிகளிலும் தோண்டப்பட்டன. இவ்வகழ்வுக் குழிகளிலிருந்து கி.மு.10000க்கும் 3000க்கும் இடைப்பட்ட நுண்கருவிக் காலம், கி.மு.3000க்கும் 1000க்கும் இடைப்பட்ட புதிய கற்காலம், கி.மு.1000க்கும் கி.மு.300க்கும் இடைப்பட்ட பெருங்கற்படைக்காலம், கி.மு.300க்கும் கி.பி.முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட வரலாற்றுக்காலம் என நான்கு வகைப் பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட பண்பாட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

தமிழ்நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் இந்நான்கு பண்பாட்டு எச்சங்களுடன் பாறை ஓவியங்களும், பாறைக் கீறல்களும் கிடைப்பது இதுவே முதல் முறையாகும் என்பது இவ்வகழாய்வின் சிறப்பம்சமாகும்.

கூசிகுண்டு என்றழைக்கப்படும் பாறைக் குகையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த 75 செமீ பண்பாட்டு படிமத்தில் குவார்ட்ஸ், செர்ட் போன்ற அரிய மணிக் கற்களால் உருவாக்கப்பட்ட நுண்கற்காலத்தைச் சார்ந்த அம்பு முனைகள், கூர்முனைகள், சுரண்டிகள், பிளேடுகள் கிடைத்தன. சாணாரப்பன் கோயிலில் உச்சியில் உள்ள பாறைக் குகைகளில் புதிய கற்காலத்தைச் சார்ந்த கையால் வனையப்பட்ட சிவப்பு நிற மட்பாண்டங்களும் பாறைக் கீறல்களும் கிடைத்தன. இத்தகைய பாறைக் கீறல்கள் இரு இடங்களில் மட்டுமே தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மற்றொரு இடம் திண்டிவனத்திற்கு அருகாமையில் உள்ள பெருமுக்கல் என்ற இடம் ஆகும். இதற்கடுத்து தாளப்பள்ளம் என்றழைக்கப்படும் சிற்றோடைக்கு அருகாமையில் கருவோட்டுப் பள்ளம் என்ற இடத்தில் இடப்பட்ட அகழாய்வுக் குழியில் புதிய கற்காலத்தைச் சார்ந்த உளிகளும், மழுக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. புதிய கற்காலக் கருவி ஒன்று 65 செமீ ஆழத்தில் இவ் அகழாய்வுக் குழியில் கிடைத்துள்ளது. இவ் அகழாய்வுக் குழியில் புதிய கற்கால மட்பாண்டத்தைத் தவிரப் பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்த இரும்புக் கருவிகளோ, கருப்பு சிவப்பு பானை ஓடுகளோ கிடைக்கவில்லை என்பது சிறப்பம்சமாகும். இவ்வகழாய்வுக் குழியில் இரண்டு வீடுகளின் தரைப்பகுதிகளும் அத்துடன் வட்டவடிவக் குச்சி நடப்பட்டதற்கான குழிகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இதற்கு அருகாமையில் இடப்பட்ட குழிகளில் மேல் நிலையில் பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்த கருப்பு சிவப்பு பானை ஓடுகளும் கீழ்நிலையில் புதிய கற்காலப் பண்பாட்டுக் கூறுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இது இங்கு வாழ்ந்த மக்களின் பண்பாட்டு நிலையில் ஏற்பட் மாற்றங்களை உறுதி செய்கிறது. இங்கு காணப்படும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டைச் சார்ந்ததும் சங்க இலக்கியங்களில் பெரிதும் பேசப்படுகின்றது மான உயர் பதுக்கை வகையைச் சார்ந்த ஈமக்குழிகளில் காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் ஈமக்குழி ஒன்று தெரிவு செய்யப்பட்டு அகழாய்வு செய்யப்பட்டது. இக் கற்பதுக்கை எவ்வித இடுதுளையும், முற்றமும் இன்றிக் காணப்பட்டதுடன் ஈமப் பொருட்கள் அனைத்தும் பதுக்கைக்குள் தரையின் மேல் நேரடியாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் மிக முக்கியமாகக் குறியீட்டுடன் கூடிய கருப்பு சிவப்பு பானை ஓடுகளையும், குத்தாக வைக்கப்பட்டிருந்த அம்பு முனைகள், கத்தி, உளி, வாள் போன்றவற்றையும் குறிப்பிடலாம். இடுதுளை, முற்றம், படுக்கைப் பலகை போன்றவை இல்லாது இருப்பது இது காலத்தால் மிகவும் முந்தியது என்பதைச் சுட்டுகிறது. இக் கற்பதுக்கை சுமார் 10 டன் எடை கொண்ட கல்லால் மூடப்பட்டிருந்தது. வாழ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு அகழ்வில் சா, த என்று தமிழ்-பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்ட மட்பாண்ட ஓடு ஒன்று கிடைத்தது. தருமபுரி மாவட்டத்திலேயே முதன்முறையாக இவ்வகழாய்வில்தான் தமிழ்-பிராமி எழுத்து பொறித்த பானை ஓடு கிடைத்துள்ளது. இதைத்தவிர அசோகன்-பிராமியில் காணப்படும் ம என்னும் எழுத்துடன் (கீறல்) கூடிய மட்பாண்டத்துண்டு ஒன்றும் கிடைத்துள்ளது. **





-முனைவர் கா.இராஜன், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல்துறை

## பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம்

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு வளர்ச்சி நல்கையாக பல்கலைக்கழக நல்கைக்குழு ரூ.225 இலட்சத்தினை வழங்கியுள்ளது. இந்நல்கையில் ரூ.45 இலட்சம் முதல் தவணையாகப் பெறப்பட்டுள்ளது.

## புத்தொளிப்பயிற்சி வகுப்புகள்

2003-2004ஆம் ஆண்டில் அறிவியல் தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை, மொழிபெயர்ப்புத் துறை, அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை, நாடகத்துறை, சிற்பத்துறை, ஓலைச்சுவடித்துறை, அகராதியியல்துறை, நாட்டுப்புறவியல் துறை, சித்தமருத்துவத்துறை, இந்திய மொழிகள் பள்ளி, இலக்கியத்துறை ஆகிய 11 துறைகளில் புத்தொளிப் பயிற்சி வகுப்புகள் பல்கலைக்கழக நல்கைக்குழுவின் நிதியுதவியுடன் நடைபெற உள்ளன.

**இ.அ.ப. மட்டும்** **நூலஞ்சல்**

# தமிழ்ப் பல்கலைக் கழகம்
## தஞ்சாவூர்

திரு. [illegible] அவர்கள்
[illegible] [illegible] [illegible]
[illegible].

**தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 2003-04ஆம் கல்வியாண்டில் பின்வரும் துறைகளில் வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.**

### முனைவர்/ஆய்வியல்நிறைஞர் பட்டப்படிப்பு

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத்துறை
4. அரிய கையெழுத்துச்சுவடித்துறை
5. ஓலைச்சுவடித்துறை
6. கல்வெட்டியல்துறை
7. மொழிபெயர்ப்புத்துறை
8. அகராதியியல்துறை
9. சமூக அறிவியல்துறை
10. அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை
11. அயல்நாட்டுத்தமிழ்க் கல்வித்துறை
12. இலக்கியத்துறை
13. மொழியியல்துறை
14. தத்துவமையம்
15. நாட்டுப்புறவியல்துறை
16. இந்தியமொழிகள் பள்ளி
17. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்
18. சித்த மருத்துவத்துறை
19. தொல்லறிவியல்துறை
20. கட்டடக்கலைத்துறை

### முதுகலை (எம்.ஏ.,) முழுநேரம்: 2ஆண்டுகள்

| பாடம் | துறை |
|---|---|
| தமிழ் | இலக்கியத்துறை |
| பயன்பாட்டு மொழியியல் | மொழியியல்துறை |
| வரலாறுகலை மற்றும் பண்பாடு | சிற்பத்துறை |
| திருக்கோயில் நிருவாகம் சுற்றுலாவியல் மற்றும் தத்துவம் | தத்துவமையம் |
| வரலாறு மற்றும் தொல்லியல் | கல்வெட்டுத்துறை |
| நாட்டுப்புறவியலும் பண்பாடும் | நாட்டுப்புறவியல்துறை |
| இசை | இசைத்துறை |
| பயன்பாட்டுத் தமிழியல் | வளர்தமிழ்ப்புலம் அகராதியியல்துறை |
| சமூகஅறிவியல் | சமூகஅறிவியல்துறை |

### பெருஞ்சான்றிதழ் (Diploma) படிப்பு (காலம்: ஓராண்டு)

| பாடம் | தகுதி | துறை |
|---|---|---|
| நாடகப் படைப்பாக்கம் | இளநிலைப்பட்டம் | நாடகத்துறை |
| மொழிபெயர்ப்பியல் | முதுகலைப்பட்டம் | மொழிபெயர்ப்புத்துறை |
| அகராதியியல் | இளநிலைப்பட்டம், (பி.லிட்.,புலவர் பட்டத்தேர்ச்சி) | அகராதியியல்துறை |
| காகிதச் சுவடியியல் | இளநிலைப்பட்டம் | அரியகையெழுத்துச்சுவடித்துறை |

### சான்றிதழ் (Certificate) படிப்பு

| பாடம் | தகுதி | பயிற்றுவிக்கும் துறை | காலம் |
|---|---|---|---|
| இசை | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | இசைத்துறை | ஓராண்டு |
| மருத்துவச் சுவடிகள் பதிப்பு முறைமை | இளநிலைப்பட்டம் | சித்தமருத்துவத்துறை<br>அரியகையெழுத்துச்சுவடித்துறை | 6 மாதங்கள் |
| மூலிகைவளர்ப்பு முறைமை | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | சித்தமருத்துவத்துறை | 3 மாதங்கள் |
| கணிப்பொறி பயன்பாடு | +2 தேர்ச்சி | கணிப்பொறி அறிவியல்துறை | 3 மாதங்கள் |
| இணையவழியமைப்பு | இளநிலைப்பட்டம் | கணிப்பொறி அறிவியல்துறை | 3 மாதங்கள் |

"பண்பாய் இதனைப் பேணிக் காப்போர்
பொன்னடி இரண்டும் எம்தலை மேலன"
-முதுமுனைவர் வ.அய்.சுப்பிரமணியம்

பதிப்பாசிரியர் : இயக்குநர் (பொறுப்பு), பதிப்புத்துறை
அச்சு : தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் -613001